# ஓய்வுநாட் பாடசாலை வரலாறு

ஆக்கம்: திருமதி வினோதினி போல்ராஜ்
மேற்பார்வையாளர்

ஒக்டோபர், 2003

*''பூர்வ நாட்களை நினை, தலைமுறை தலைமுறையாகச் சென்ற வருடங்களை கவனித்துப்பார், உன் தகப்பனை கேள், அவன் உனக்கு அறிவிப்பான். மூப்பர்களை கேள் அவர்கள் உனக்கு சொல்வார்கள்.'' (உபாகமம் - 32:7)*

நமது ஆலயத்தின் 150ம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாட தேவன் எமக்குக் கொடுத்த ஆசீர்வாதத்திற்காக நாம் அவருக்கு நன்றி கூறுவோமாக. சிறு சபையாகத் தோன்றி இன்று பெருஞ்சபையாக மாறி பல சங்கங்களைக் கொண்டு இயங்கும் இவ்வாலயத்தின் ஞாயிறு பாடசாலையின் பங்கைப் பற்றி எழுத எனக்குக் கிடைத்த தருணத்திற்காக தேவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

1951ம் ஆண்டுக்கு முன்னர் திரு இராசையா ஓய்வு நாட் பாடசாலையின் மேற்பார்வையாளராக இருந்தார். 1951 தொடக்கம் 1958 வரையான ஆண்டு காலத்தில் திரு. ஞானையா நோவா மேற்பார்வையாளராக இருந்தார். இப்பணியை செய்வதற்கு இவரது பாரியார் ஜோய்ஸ் நோவா உறுதுணையாக இருந்தார். இக்காலகட்டத்தில் திருமதி. ஜெசி சம்சன், திரு. அசரியா சாமுவேல், திருமதி. அலிஸ் ராஜேந்திரம், திரு.ஞானக்கண் ஆகியோர் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையாக இருந்தனர்.

இக்காலத்தில் ஞாயிறு பாடசாலை ஞாயிறு மாலை 3 மணிக்கு நடைபெற்றது. அதிகமான சபையினர் கொள்ளுப்பிட்டியிலும், கொம்பனி வீதியிலும் வசித்து வந்தனர். இவர்களின் பிள்ளைகளே இப்பாடசாலைக்கு வந்ததால், கொள்ளுப்பிட்டியிலிருந்து பிள்ளைகள் வருவதற்கு மாட்டு வண்டில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இவ்வண்டி கொள்ளுப்பிட்டி நெல்சன் வீதியில் அமைந்துள்ள பால்காரன் தோட்டத்தில் நிறுத்தப்பட்டிருக்கும். திருமதி. ஜெசி சம்சன் இந்த மாட்டு வண்டியில் எல்லா பிள்ளைகளையும் ஞாயிறு பாடசாலைக்கு அழைத்து வருவார். திருமதி பொன்னம்மா அவர்கள் கொம்பனி வீதியிலுள்ள பிள்ளைகளை ஞாயிறு பாடசாலைக்கு அழைத்து வருவார். 1958ம் ஆண்டு திரு. ஞானையா நோவா அவர்கள் இந்தப் பணியிலிருந்து வயோதிபத்தின் காரணமாக ஓய்வு பெற்றார்.

1958 தொடக்கம் 1983 வரை திருமதி ஜெசி சம்சன் அவர்கள் இந்த தேவ பணியை மிகச் சிறந்த நெறியாள்கையுடன் புரிந்துவந்தார். இவர் கொழும்பில் அமைந்துள்ள பிசப்

கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றியதுடன் இப்பணியை மிகவும் பொறுப்புணர்வோடு செய்தார். இவர் அசிரியராக கடைமையாற்றியதால் பிள்ளைகள் நல்ல கிறிஸ்தவ போதனையிலும் ஒழுக்க நெறியிலும் வழிநடத்தப்பட்டார்கள். இதன் பிரதிபலனையே இன்று கிறிஸ்துநாதர் ஆலயம் அனுபவிக்கிறது. இன்றைய ஆலய நிர்வாகக் குழு அங்கத்தவர்களும், தாய்மார் சங்க கமிட்டி அங்கத்தவர்களும், ஓய்வுநாட் பாடசாலை ஆசிரியர்களும் விதந்து சாட்சிகளாக திகழ்கின்றனர். ஏனென்றால் இவர்களில் பெரும்பாலானோர் திருமதி ஜெசி சம்சன் அவர்களிடம் கிறிஸ்தவ போதனைகளை படித்தவர்கள்.

பழைய ஏடுகளை கண்ணோக்கினால், இன்று நாம் பாவிக்கும் சிறு அலுமாரி 1963ம் ஆண்டு வாங்கப்பட்டது. இந்தக் காலத்தில் ஞாயிறு பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த திருமதி அலிஸ் ராஜேந்திரனின் ஊக்கமான முயற்சியால் இவ்வலுமாரி வாங்கப்பட்டது.

இந்தக் காலத்தில் ஞாயிறு பாடசாலைப் பிள்ளைகள் நடனம், தாளம், வானொலி நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் பங்கேற்றார்கள். இதற்கு முக்கிய காரணமாகவும், முதுகெலும்பாகவும் இருந்து ஊக்கமும் உற்சாகமும் அளித்தவர் திருமதி ரோஸ் ஞானப்பிரகாசம் ஆவார்.

1960ம் ஆண்டிற்குப் பின் எமது ஞாயிறு பாடசாலையில் படித்த மாணவ, மாணவிகள் இதே பாடசாலையின் ஆசிரியர்களாக கடமையாற்றத் தொடங்கினார்கள்.

தேவனுடைய ஆசீர்வாதத்தால் எமது சபை வளர்ந்து விரிந்து பெரிய ஓர் ஆலமரமாக வேரூன்றியது. சபையின் அங்கத்தவர்கள் எண்ணிக்கை பெருகியது. கொள்ளுப்பிட்டியிலும் கொம்பனி வீதியிலும் மட்டுமன்றி கொழும்பின் பல பாகங்களிலுமிருந்து எமது ஆலயத்திற்கு விசுவாசிகள் வரத்தொடங்கினார்கள். காலப்போக்கில் அங்கத்துவத்தையும் பெற்றார்கள். இதன் மூலம் ஞாயிறு பாடசாலைப் பிள்ளைகளின் எண்ணிக்கையும் அதிகரித்தது. தூர இடங்களிலிருந்து வரும் பிள்ளைகளின் வசதிக்காகவும் அவர்களுக்கு தேவ வசனத்தைப்பற்றிய அறிவைப் புகட்டுவதற்காகவும், ஞாயிறு பாடசாலை நேரம் காலை 9.30 மணிக்கு மாற்றப்பட்டது.

1978 தொடக்கம் 1983 வரையான காலப் பகுதியில் சபையின் போதகராகவிருந்த கனம் பெனற் பாலசிங் அவர்கள் ஞாயிறு பாடசாலையின் பிள்ளைகள், வேதாகமத்தையும் அதிலுள்ள போதனைகளையும் நன்கு கற்றுக்கொள்ள வேண்டும் என்றும், அகில இலங்கை ரீதியில் பிள்ளைகள் போட்டியில் கலந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடனும், இலங்கை வேதாகம சங்கத்தால் வருடாந்தம் நடத்தப்படும் வேதாகம

வினா விடை போட்டிகளுக்கு அறிமுகப்படுத்தினார். இதற்கு இவரது பாரியார் ஜூலி பாலசிங் பிள்ளைகளை பயிற்றுவித்தார். இவர் சிரேஷ்ட பகுதி பிள்ளைகளை முதன் முதலில் 1979ம் ஆண்டில் பயிற்றுவித்தார். எம் ஞாயிறு பாடசாலை மாணவர்களும் சபை மாணவர்களுமாக சேர்ந்து திருமதி ஜூலி பாலசிங்கின் முயற்சியினாலும், கர்த்தரின் பெரிதான கிருபையினாலும் 1980ம் ஆண்டு அகில இலங்கை வேதாகமப் புதிர் போட்டியில் 2ம் இடத்தைப் பெற்று கேடயத்தை சுவீகரித்தனர். அன்று முதல் இன்றுவரை ஞாயிறு பாடசாலை மாணவ, மாணவியர் இப்போட்டியில் தவறாது பங்குபற்றுகிறார்கள். 1996ம் ஆண்டு சிரேஷ்ட பிரிவினர் அகில இலங்கை வேதாகமப் புதிர் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றனர். இவர்களை இப்போட்டிக்கு பயிற்றுவித்த செல்வி ஷெரீன் செல்வரட்னம் இந்த வெற்றிக்கு ஒரு முக்கிய காரணமாவார்.

1983 தொடக்கம் 1984ம் ஆண்டுவரை புதிய மேற்பார்வையாளராக செல்வி ஐரிஸ் குறுகிய காலம் சேவை செய்தார். இவருடைய அபாரமான இசை ஞானம் ஞாயிறு பாடசாலையின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியது. இவரின் பியானோ வாத்தியக் கருவியின் இசையின் மூலமும் நெறியாள்கை மூலமும் பாட்டுப் பாடும் பழக்கமும், பாடல்கள் கற்றுக்கொள்ளும் பழக்கமும் ஞாயிறு பாடசாலைக்கு வந்தது. 1984ம் ஆண்டு இவர்கள் எமது நாட்டைவிட்டு குடியகன்றதால் திருமதி ரூத் சுப்பிரமணியம் இந்தப் பாரிய பொறுப்பை கையேற்றார்.

1984 தொடக்கம் 2002 வரையான காலப்பகுதியில் திருமதி ரூத் சுப்பிரமணியம் இன் முகத்துடனும் மிகப் பொறுமையுடனும் இப்பதவியை கையாண்டார். இவரின் மேற்பார்வையின் கீழ் பாடசாலையின் மாணவர் தொகை பல மடங்காக அதிகரித்தது.

1985 – 1986 : முதன் முறையாக 7 மாணவருடன் சிங்கள மொழி வகுப்பு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

1987 – 1988 : அரசாங்கம் ஞாயிறு பாடசாலை மாணவர்களுக்கு பனிஸ், பால் ஆகியவற்றை வாரந்தோறும் அளித்தது.

1989 – 1990 : பாடசாலையின் தளபாட பற்றாக்குறை சபையினால் தீர்த்து வைக்கப்பட்டது.

1993 – 1994 : பல இடையூறுகள் மத்தியில் ஞாயிறு பாடசாலையின் வகுப்புகள் சபை மண்டபத்தில் நடத்தப்பட்டன. வகுப்புகளின் எண்ணிக்கை அதிகரித்ததாலும், ஒழுங்கான பாடங்கள் கற்பித்தலுக்கு அவசியமானதாலும் கைவிடப்பட்ட ஆங்கில குருமனை ஞாயிறு பாடசாலைக்காக ஒதுக்கப்பட்டது.

1992 – 1998 : கனம் ஐசக் செல்வரட்னம் அவர்களும் அவர்களின் மகள்மாரான தயாளினியும், ஷெரீனும் பிள்ளைகளின் ஆன்மீக வளர்ச்சிக்கு பெரிதும் பங்கு வகித்தனர்.

1997 – 1998 : வயதெல்லைக்கேற்ப வகுப்புகள் பிரிக்கப்பட்டதனால் வகுப்புகள் எண்ணிக்கை அதிகரித்தது. மேலதிக வகுப்புகள் நடத்துவதற்காக ஊக்கமும் விருப்பமும் உள்ள இளம் தாய்மார்கள் ஆசிரியராக நியமிக்கப்பட்டனர்.
1999 – 2000 : ஞாயிறு பாடசாலை மாணவர்களின் தொகை மேலும் அதிகரித்ததனால் மேலதிக தளபாடங்கள் சபையினால் வாங்கப்பட்டது.

திருமதி சுப்பிரமணியத்துக்கு உதவியாளராகவும், பாடசாலை பொறுப்புகளை பகிர்ந்துகொள்ளவும் துணை மேற்பார்வையாளராக திருமதி வினோதினி போல்ராஜ் 2000ம் ஆண்டு நியமிக்கப்பட்டார்.

திருமதி சுப்பிரமணியம் அவர்களின் காலத்தில்தான் ஞாயிறு பாடசாலை சிறுவர்கள் சபையின் சேர்ப்பின் பண்டிகையில் ஊக்கத்துடன் ஈடுபட்டனர். தங்கள் கைவேலை பொருட்கள் மூலமாகவும் வினோத விளையாட்டுகளினாலும் தங்களால் ஆன வருமானத்தை சபைக்கு பெற்றுக்கொடுக்கத் தொடங்கினார்கள்.

இவரின் மேற்பார்வையின் கீழ் ஞாயிறு பாடசாலை மாணவர் அகில இலங்கை வேதாகமப் பேச்சு போட்டிகளிலும், பாட்டுப் போட்டிகளிலும், நாடகப் போட்டிகளிலும் பங்குபற்றத் தொடங்கினார்கள். இவற்றுக்கூடாக மாணவர்களின் தாலந்துகள் எமது ஆலயத்துக்குப் பல பரிசுகளை பெற்றுக்கொடுத்தன. தாய்மாரின் ஞாயிறன்று பிள்ளைகள் தாய்மாருக்கு நன்றி கூறுமுகமாக கைவினை பொருட்களை செய்வதும், தாய்மார் ஆலய வழிபாட்டில் பங்குபற்றும் பழக்கமும் இவர்கள் காலத்திலே தொடங்கியது. 18 ஆண்டு காலமாக ஞாயிறு பாடசாலை மேற்பார்வையாளராக இருந்த திருமதி ரூத் சுப்பிரமணியம் அவர்கள் சுகவீனம் காரணமாக 2002ம் ஆண்டு பதவியிலிருந்து விலகிக்கொண்டார்.

2002 ஆம் ஆண்டு ஞாயிறு பாடசாலை மேற்பார்வையாளராக திருமதி வினோதினி போல்ராஜ் நியமிக்கப்பட்டார். அவருக்கு உதவியாக திருமதி ப்ளோரா பிலிப் துணை மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டார். தேசிய கிறிஸ்தவ மன்றத்தால் நெறிப்படுத்தப்பட்டு, கொழும்பு மறைமாவட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட பாடநெறி ஞாயிறு பாடசாலை மாணவருக்குரிய பாடநெறியாக அறிமுகப்படுத்தப்பட்டது.

தேசிய கிறிஸ்தவ மன்றத்தாலும் இலங்கை திருச்சபை கிறிஸ்தவ மன்றத்தாலும் நடத்தப்படும் ஆசிரியர் பயிற்சி முகாம்களுக்கு எமது ஆசிரியர்கள் தொடர்ந்து பங்குபற்றத் தொடங்கினார்கள்.

2002ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் சிறுவர் ஞாயிறு ஆலய வழிபாடு முழுவதும் ஞாயிறு பாடசாலை மாணவ, மாணவிகளால் முதன் முதலாக நடத்தப்பட்டது.

இன்று எமது ஞாயிறு பாடசாலை 109 மாணவர்களையும், 19 ஆசிரியர்களையும், 2 துணையாசிரியர்களையும், 17 வகுப்புகளையும் கொண்ட மிகப் பெரிய ஞாயிறு பாடசாலையாக திகழ்கிறது. இது இரண்டு பாலர் வகுப்புகளையும் நான்கு சிங்கள மொழி வகுப்புகளையும் உள்ளடக்குகிறது. ஆசிரியர்களும் மாணவர்களும் பங்கபற்றும் ஓர் சுற்றுலாவை எமது ஞாயிறு பாடசாலை வருடாந்தம் ஒழுங்கு செய்கிறது.

வருட இறுதியில் பரீட்சை நடைபெற்று தேறிய மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகிறது. சபையினால் ஒழுங்கு செய்யப்படும் நத்தார் கொண்டாட்டத்தில் ஞாயிறு பாடசாலை மாணவர்கள் ஆடல், பாடல், நாடகம், முதலிய பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவார்கள். நத்தார் கொண்டாட்டத்தன்று, ஒழுங்காக ஞாயிறு பாடசாலையில் பங்குபெறும் சகல மாணவருக்கும் பரிசுகள் வழங்கப்படுகிறது.

2002ம் ஆண்டு தொடக்கம் வாலிபர் சங்கத்தால் நடத்தப்படும் வருடாந்த கிரிக்கட் போட்டியில் ஞாயிறு பாடசாலை மாணவரும் பங்குபற்றத் தொடங்கினார்கள்.

எமது ஞாயிறு பாடசாலை ஆசிரியர்களில் சிலர் தேசிய கிறிஸ்தவ மன்றம், இலங்கை கிறிஸ்தவ கல்வி மன்றம் ஆகிய மன்றங்களால் நடத்தப்படும் ஆசிரியர் பயிற்சிக் கருத்தரங்குகளில் ஏனைய பிரதேசங்களில் உள்ள ஞாயிறு பாடசாலை ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கின்றனர்.

எமது பாடசாலையானது மிகச் சிறிய விதையாக விதைக்கப்பட்டு பாடசாலை மேற்பார்வையாளர்களினதும் ஆசிரியர்களினதும் திறமையாலும் ஊக்கமுள்ள முயற்சியினாலும் சபை மூப்பர்களின் ஆதரவினாலும், சபையாரின் ஊக்கத்தினாலும், சபை போதகர்களின் வழிநடத்தலினாலும் எல்லாம் வல்ல பிதாவின் ஆசீர்வாதத்தினாலும் மிகப் பெரிய மரமாகிக் கனி கொடுக்கிறது. சபையின் எதிர்காலம் வாலிபர் சங்கமும், ஞாயிறு பாடசாலையும் ஆகும். ஞாயிறு பாடசாலை நல்ல தாலந்துகள் உள்ள வாலிபர்களையும், நல்ல திறமையுள்ள மூப்பர்களையும் உருவாக்கும் ஒரு அத்திவாரமாக இருக்கிறது. இப்பெரிய சேவையை செய்த, செய்கின்ற எமது ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும், சபை மூப்பர்களுக்கும், சபை போதகர்களுக்கும் தேவ ஆசீர்வாதம் எப்போதும் நிறைந்திருக்க வேண்டுகின்றேன்.

*''கடைசியாக, எங்களுக்கு அல்ல, கர்த்தாவே, எங்களுக்கு அல்ல, உம் நாமத்திற்கே மகிமை வரப்பண்ணும்''* – (சங்கீதம் - 115:1)